Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No.232/18

**Deposition of P.W.7**

| | | |
|---|---|---|
| Name | : | ரெங்கசாமி |
| Father's Name | : | ராமசாமி |
| Village | : | துளுக்கவிடுதி |
| Taluk | : | பேராவூரனி |
| Caste | : | |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | **52/2021** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 15.02.2021**

**முதல் விசாரணை**

நான் தற்போது துளுக்கவிடுதி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். **23.07.2018** ம் தேதி மாலை **3.30** மணியளவில் பாலமுருகனும் பிரகாசும் மொய்விருந்துக்கு சென்றுவிட்டு இருசக்கர வாகனத்தின் பூச்சிக்கடை தேங்காய்கடை ராஜா வீட்டிற்கு முன்பாக வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு ராஜா தகவல் சொன்னார் நான் சென்று பார்த்தேன். பாலமுருகனுக்கு தோள்பகுதியிலும் காதுபகுதியிலும் காயம் ஏற்பட்டது பிரகாசுக்கு வலது காதிலும் வலது காலிலும் காயம் ஏற்பட்டு இருவரும் இறந்து கிடந்தனர். இருவரையும் புதுக்கோட்டை அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு கொண்டு சென்றார்கள் அங்கு வைத்து வடகாடு போலீசார் என்னை விலசாரித்தனர் தெரிந்தவிபரம் சொன்னேன்.

**எதிரி தரப்பில் கு.வி.**

இறந்துபோன பாலமுருகன் எனது அண்ணன் மகன். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் வகனப்போக்குவரத்து மிகுந்த இடம் என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்த தேதி முகூர்த்த தேதி என்பதால் வாகனப்போக்குவரத்து அதிகமாக இருந்தது என்று சொன்னால் சரிதான். கூட்டம் அதிகமாக இருந்ததால் வாகனம் மெதுவாகத்தான் சென்று வந்தது என்று சொன்னால் சரிதான். இறந்துபோன பாலமுருகன் பிரகாஷ் இருவருக்கும் மது அருந்தும் பழக்கம் உண்டு என்று சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். இறந்துபோனவர் எனது உறவினர் என்பதால் அவரது குடும்பத்தாருக்கு இழப்பீடு கிடைககவேண்டுமென்று அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No.232/18

**Deposition of P.W.6**

| | | |
|---|---|---|
| Name | : | சக்திவேல் |
| Father's Name | : | தர்மலிங்கம் |
| Village | : | துளுக்கவிடுதி |
| Taluk | : | பேராவூரனி |
| Caste | : | |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | **43/2021** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 15.02.2021**

**முதல் விசாரணை**

நான் தற்போது துளுக்கவிடுதி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். **23.07.2018** ம் தேதி காலை **8.30** மணியளவில் நான் எனது கொல்லையில் வேலைபார்த்துக்கொண்டிருந்தேன். மாங்காடு பூச்சிக்கடை அருகே தேங்காய் வியாபாரி ராஜா வீட்டிற்கு முன்பாக பிரகாஷ் என்பவர் ஓட்டிவர பாலமுருகன் என்பவர் பின்னால் அமர்ந்துவந்தபோது டாடா இண்டிகா வாகனம் மோதி பாலமுருகன் பிரகாஷ் இருவரும் இறந்துவிட்தாகவும் அவர்களை புதுக்கோட்டை அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்துள்ளதாக சொன்னார்கள். நான் போய்பார்த்தேன் இறந்துபோன பாலமுருகனின் பிரேதத்தின்மீது வடகாடு போலீசார் விசாரணை செய்தார்கள் நான் தெரிந்தவிபரம் கூறினேன்.

**எதிரி தரப்பில் கு.வி.**

இறந்துபோன பாலமுருகன் எனது சித்தப்பா மகன். பாலமுருகன் பிரகாஷ் ஆகியோர் மொய்விருந்திற்கு சென்றுவிட்டு திரும்பும்போதுதான் மேற்படி விபத்து என்று சொன்னால் எனக்கு தெரியாது இருவருக்கு மதுஅருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. போலீசார் என்னை வடகாடு காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். மேற்படி காலை 8.30 மணியளவில் வந்த தகவலைத்தான் எனது போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இறந்துபோனவர் எனது உறவினர் என்பதால் அவரது குடும்பத்தாருக்கு இழப்பீடு கிடைககவேண்டுமென்று அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.